எட்டாவது

குறிஞ்சிப்பாட்டு.

அன்னாய் வாழிவேண் டன்னை யொண்ணுத
லொலிமென் கூந்தலென் றோழி மேனி
விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ
யகலு ளாங்க ணறியுநர் வினாயும்
பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் லுருவிற் கடவுட் பேணி
நறையும் விரையு மோச்சியு மலவுற்
றெய்யா மையலை நீயும் வருந்துதி
நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும்
புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு
முட்கரந் துறையு முய்யா வரும்படர்
செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்
முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணருஞ்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த
லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை
யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்
மாதரு மடனு மோராங்குத் தணப்ப
நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி
யிருவே மாய்ந்த மன்ற மிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
வாற்றின் * வாரா ராயினு மாற்ற
வேனையுல கத்து மியைவதா னமக்கென
மானமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானாச் சிறுமைய ளிவளுந் தேம்பு
மிகன்மீக் கடவு மிருபெரு வேந்தர்
வினையிடை நின்ற சான்றோர் போல
விருபே ரச்சமோ டியானு மாற்றலேன்
கொடுப்பினன் குடைமையுங் குடிநிர லுடைமையும்

* வாராதாயினுமென்றும் பாடம்.

வண்ணமுந் துணையும் பொரீஇ யெண்ணா
தெமியேந் துணிந்த வேமஞ்சா லருவினை
நிகழ்ந்த வண்ண நீநனி யுணரச்
செப்ப லான்றிசிற் சினவா திமோ
நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குர
னற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
யெற்பட வருதிய ரெனநீ விடுத்தலிற்
கலிகெழு மீமிசைச் சேணோ னிழைத்த
புலியஞ் சிதண மேறி யவண
சாரற் சூரற் றகைபெற வலந்த
தழலுந் தட்டையுங் குளிரும் பிறவுங்
கிளிகடி மரபின வூழூழ் வாங்கி
யுரவுக் கதிர்தெறூஉ முருப்பவி ரமயத்து
விசும்பாடு பறவை வீழ்பதிப் படர
நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண்
டகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசதிர்ந் தன்ன வின்குர லேறொடு
நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி
யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ
யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின்
மின்மயங்கு கருவிய கன்மிசைப் பொழிந்தென
வண்ண னெடுங்கோட் டிழிதரு தெண்ணீ
ரவிர்துகில் புரைய மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பிற் பாயம் பாடிப்
பொன்னெறி மணியிற் சிறுபுறந் தாழ்ந்தவெம்
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
யுள்ளகஞ் சிவந்த கண்ணேம் வள்ளித
ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடு வேரி தேமா மணிச்சிகை
யுரிதுநா றவிழ்தொத் துந்தூழ் கூவிள
மெரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்
வடவனம் வாகை வான்பூங் குடச

எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை
பயினி வானி பல்லிணர்க் குரவம்
பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா
விரிமல ராவிரை வேரல் சூரல்
குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி
குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்
போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி
செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகங்
கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை
குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்
வாழை வள்ளி நீணறு நெய்தல்
தாழை தளவ முட்டாட் டாமரை
ஞாழன் மௌவ னறுந்தண் கொகுடி
சேடல் செம்மல் சிறுசெங் குரலி
கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை
காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்
பாங்கர் மராஅம் பல்பூந் தணக்க
மீங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை
*யடம்பம ராத்தி நெடுங்கொடி யவரை
பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி
வஞ்சி பித்திகஞ் சிந்து வாரந்
தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி
நந்தி நறவ நறும்புன் னாகம்
பாரம் பீரம் பைங்குருக் கத்தி
யாரங் காழ்வை கடியிரும் புன்னை
நரந்த நாக நள்ளிரு ணாறி
மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவு
மாக்குவிரித் தன்ன † பரேரம் புழகுடன்
மாலங் குடைய மலிவன மறுகி
வான்கண் கழீஇய வகலறைக் குவைஇப்
புள்ளா ரியத்த விலங்குமலைச் சிலம்பின்
வள்ளுயிர்த் தெள்விளி யிடையிடைப் பயிற்றிக்
கிள்ளை யோப்பியுங் கிளையிதழ் பறியாப்
பைவிரி யல்குற் கொய்தழை தைஇப்

* அடும்பெனவும் பாடம்.
† பாரம் புழகெனவும் பாடம்.

பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி
யெரியவி ருருவி னங்குழைச் செயலைத்
தாதுபடு தண்ணிழ லிருந்தன மாக
வெண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்
தண்ணறுந் தகரங் கமழ மண்ணி
யீரம் புலர விரலுளர்ப் பவிழாக்
காழகி லம்புகை கொளீஇ யாழிசை
யணிமிகு வரிமிஞி றார்ப்பத் தேங்கலந்து
மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்
மலையவு நிலத்தவுஞ் சினையவுஞ் சுனையவும்
வண்ண வண்ணத்த மலராய்பு விரைஇய
தண்ணறுந் தொடையல் வெண்போழ்க் கண்ணி
நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சிப்
பைங்காற் பித்திகத் தாயித ழலரி
யந்தொடை யொருகாழ் வளைஇச் செந்தீ
யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ
யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்பச் சாந்தருந்தி
மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்துத்
தொன்றுபடு நறுந்தார் பூணொடு பொலியச்
செம்பொறிக் கேற்ற வீங்கிறைத் தடக்கையின்
வண்ண வரிவில் லேந்தி யம்புதெரிந்து
நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
யியலணிப் பொலிந்த வீகை வான்கழ
றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ
முனைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரி
னுரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெகுளு
முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
இளையாக் கண்ண வளைகுபு நெரிதர
நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா
மிடும்பைகூர் மனத்தே மருண்டுபுலம் படர
மாறுபொரு தோட்டிய புகல்வின் வேறுபுலத்
தாகாண் விடையி னணிபெற வந்தெ
மலமர லாயிடை வெரூஉத லஞ்சி
மெல்லிய வினிய மேவரக் கிளந்தெ
மைம்பா லாய்கவி னேத்தி யொண்டொடி

யசைமென் சாய லவ்வாங் குந்தி
மடமதர் மழைக்க ணிளையீ ரிறந்த
கெடுதியு முடையே னென்றன னதனெதிர்
சொல்லே மாதலி னல்லாந்து கலங்கிக்
கெடுதி யும்விட ராயி னெம்மொடு
சொல்லும் பழியோ மெல்லிய லீரென
நைவளம் பழுநிய பாலை வல்லோன்
கைகவர் நரம்பி னிம்மென விமிரு
மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த
தாதவிழ லரித் தாசினை பிளந்து
தாறடு களிற்றின் வீறுபெற வோச்சிக்
கல்லென் சுற்றக் கடுங்குர லவித்தெஞ்
சொல்லற் பாணி நின்றன னாக
விருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப்
பிணையேர் நோக்கின் மனையோண் மடுப்பத்
தேம்பிழி தேறன் மாந்திமகிழ் சிறந்து
சேம மடிந்த பொழுதின் வாய்மடுத்
திரும்புன கிழத்தலிற் சிறுமை நோனு
தாவுற முஞ்சிலை கொளீஇ நோய்மிக்
குரவுச்சின முன்பா னுடல்சினஞ் செருக்கிக்
கணைவிடு புடையூக் கானங் கல்லென
மடிவிடு வீளையர் வெடிபடுத் தெதிராக்
கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக
விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கிமாங் கொல்பு
மையல் வேழ மடங்கலி னெதிர்தர
வுய்விட மறியே மாகி யொய்யெனத்
திருந்துகோ லெல்வளை * தெழிப்ப நாணுமறந்து
விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்
சூருறு மஞ்ஞையி னடுங்க வார்கோ
லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலிற்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லா
தயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவே
ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்பத்

* தெளிர்ப்பவெனவும் பாடம்.

திண்ணிலைக் கடம்பின் றிரளரை வளைஇய
துணையறை மாலையிற் கைபிணி விடேஎ
நுரையுடைக் கலுழி பாய்தலி னுரவுத்திரை
யருங்கரை வாழையி னடுங்கப் பெருந்தகை
யஞ்சி லோதி யசையல் யாவது
மஞ்ச லோம்புநின் னணிநல நுகர்கென
மாசறு சுடர்நுத னீவி நீடுநினைந்
தென்முக நோக்கி நக்கன னந்நிலை
நாணு முட்கு நண்ணுவழி யடைதர
வொய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ
யாக மடைய முயங்கலி னவ்வழிப்
பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் றீங்கனி யுதிர்ந்தெனப்
புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவி
னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேற
னீர்செத் தயின்ற தோகை வியலூர்ச்
சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி
யரிக்கூட் டின்னியங் கறங்க வாடுமகள்
கயிறூர் பாணியிற் றளருஞ் சாரல்
வரையர மகளிரிற் சாஅய் விழைதக
விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட்
டண்கம ழலரி தாஅய் நன்பல
வம்புவிரி களத்திற் கவின்பெறப் பொலிந்த
குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிற
லுள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு
சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி
வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப
மலரத் திறந்த வாயில் பலருணப்
பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்
வசையில் வான்றுணைப் புரையோர் கடும்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்
கறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி

வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
பூமலி சோலை யப்பகல் கழிப்பி
யெல்லை செல்ல வேழுர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய
மான்கண மாமுதற் றெவிட்ட வான்கணங்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர
வேங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட லகவப்
பாம்புமணி யுமிழப் பல்வயிற் கோவல
ராம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற
வாம்ப லாயிதழ் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
யந்தி யந்தண ரயரக் கானவர்
விண்டோய் பணவை மிசைஞெகிழி பொத்த
வான மாமலை வாய்சூழ்பு கறுப்பக் கானங்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ
நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட்
கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென
வீர நன்மொழி தீரக் கூறித்
துணைபுணை ரேற்றி னெம்மொடு வந்து
துஞ்சா முழவின் மூதூர் வாயி
லுண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்று
மிரவரன் மாலைய னேவரு தோறுங்
காவலர் கடுகினுங் கதனுய் குரைப்பினு
நீதுயி லெழினு நிலவுவெளிப் படினும்
வேய்புரை மென்றோ ளின்றுயி லென்றும்
பெறாஅன் பெயரினு முனிய லுறாஅ
னிளமையி னிகந்தன்று மிலனே வளமையிற்
றன்னிலை * தீர்ந்தன்று மிலனே கொன்னூர்
மாய வரவி னியல்புநினைஇத் தேற்றி
நீரொறி மலரிற் சாஅ யிதழ்சோரா
வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்க

---

* திரிந்தன்றுமிலனென்றும் பாடம்.

ஞுகத் தரிப்பனி யுறைப்ப நாளும்
வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய்
நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்கு
லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
துருமுஞ் சூரு மிளைதே ரவமு
மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமு
நூழிலு மிழுக்கு முழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்
வழுவின் வழாஅ விழுமமவர்
குழுமலை விடாக முடையவா லெனவே.

இதன்பொருள்.

இதற்குக் குறிஞ்சியென்று பெயர்கூறினார்; இயற்கைப்புணர்ச்சியும் பின்னர்நிகழும் புணர்ச்சிகளுக்கு நிமித்தங்களும் கூறுதலின். அன்றியும் முதலானும் கருவானும் குறிஞ்சிக்குரியனவேகூறுதலானும் அப்பெயர்கூறினார். * "அறத்தொடு நிற்குங் காலத் தன்றி, யறத்தியன் மரபில டோழி யென்ப." என்பதனால், தோழி அறத்தொடு நிற்குங்காலம்வந்து செவிலிக்கு அறத்தொடுநின்றவழி அதற்கிலக்கணங்கூறிய † "எளித்த லேத்தல் வேட்கை யுரைத்தல், கூறுத லுசாத லேதீடு தலைப்பா, டுண்மை செப்புங் கிளவியொடு தொகைஇ, யவ்வேழு வகைய வென்மனார் புலவர்." என்னுஞ் சூத்திரத்தேழனுள், கூறுதலுசாதலொழிந்த ஆறுங்கூறி அறத்தொடுநிற்கின்றாளென்றுணர்க.

அன்னாய் வாழி—தாயே வாழ்வாயாக;

[வேண் டன்னை:] அன்னை வேண்டு—தாயே யான்கூறுகின்றவார்த்தையை விரும்புவாயாக;

[ஒண் ணுத, லொலிமென் கூந்தலென் றோழி மேனி, விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோ, யகலு ளாங்க ணறியுநர் வினவும், பரவியுந் தொழுதும் விரவுமலர் தூயும், வேறுபல் லுருவிற் கடவுட் பேணி, நறையும் விரையு மோச்சியு மலவுற், றெய்யாமையலை நீயும் வருந்துதி, நற்கவின் றொலையவு நறுந்தோ ணெகிழவும், புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவு, முட்கரந் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்:]

ஒண்ணுதல் ஒலி மென் கூந்தல் விறல் மேனி என் தோழி உள் கரந்துறையும் உய்யா அரும்படர்—ஒள்ளிய நுதலினையும் தழைக்கும் மெல்லிய மயிரினையும் பிறர் நிறத்தினைவென்ற வெற்றியினையுடைய நிறத்தினையுமுடைய என்னுடைய தோழி தன்மனத்துள்ளே மறைத்திருக்கும் தன்னுயிரைத் தான் தாங்கியிராமைக்குக் காரணமாகிய ஆற்றுதற்கரிய நினைவு,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கஉ.
† " " " கரு.

இழை நெகிழ்ந்த வீவு அரு கடுநோய் செப்பல் வன்மையின் யான் செறித்து—தானணிந்தகலங்களை நெகிழப்பண்ணின மருந்துகளாற் கெடுத்தற்கரிய கடிய நோய் நினக்குச்சொல்லுதற்கு எளிதன்றி வலியதன்மையையுடைமையினாலே யான் அதனை என்னுள்ளேயடக்கி,

நல் கவின் தொலையவும் நறுந்தோள் நெகிழவும் புள் பிறர் அறியவும் புலம்பு வந்து அலைப்பவும் கடவலின்—அவளுடைய நன்றாகிய அழகுகெடவும் நறியதோள்மெலியவும் வளைகழலுதலைப் பிறரறியவும் தனிமை மேன்மேலேவந்து வருத்தவும் நினக்கு அறிவுறாமற் செலுத்துகையினாலே,

நீயும் அலவுற்று அகலுள் ஆங்கண் அறியுநர் வினாய்—நீயும் அலம்வந்து அகன்றவிடத்தையுடைய ஊரிடத்துக் கட்டினாலும் கழங்கினாலும் எண்ணியறிவாரைவினாவி அவர் தெய்வத்தான்வந்த வருத்தமென்றலின்,

வினாயுமென்றவிடத்தும்மையைப் பேணியென்பதன் பின்னே கூட்டுக.

வேறு உருவிற் பல் கடவுள் நறையும் விரையும் ஓச்சியும் பரவியும் தொழுதும் விரவு மலர் தூயும் பேணியும்—வேறுபட்ட வடிவினையுடைய பலதெய்வங்களைத் தூபங்களும் சந்தனமுதலியனவுங்கொடுத்தும் பரவியும் வணங்கியும் கலந்தபூக்களைச்சிதறியும் வழிபட்டும் அதனாற்றீராமையின்,

பேணியுமென்னுமும்மை சிறப்பு; ஏனைய - எண்ணும்மை.

எய்யாமையலை வருந்துதி — இந்நோயையறியாத மயக்கத்தையுடையையாய் வருந்தாநின்றாய்;

என் தோழி படர் இழை நெகிழ்ந்த நோய் நினக்குச் செப்பல் வன்மையின் யான் செறித்துத் தொலையவும் நெகிழவும் அறியவும் அலைப்பவும் கடவலின் நீயும் அலவுற்று வினாய்க் கடவுளைப்பேணியும் எய்யாமையலையாய் வருந்துதியெனமுடிக்க.

[முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை, நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்:] அத்துணை முத்தினும் மணியினும் பொன்னினும் நேர் வரும் கலம் கெடின் புணரும்—அவ்வளவாகிய முத்தானும் மாணிக்கத்தானும் பொன்னானும் பொருந்துதல்வரும் பூண் கெட்டதாயிற் பின்னும்வந்துகூடும்; அதுபோலன்றி,

முத்துமுதலியவற்றிற்குக்கூறிய இலக்கணங்களை அத்துணையென்றார். குரைய-அசை.

[சால்பும் வியப்பு மியல்புங் குன்றின், மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்த, லாசறு காட்சி யையர்க்கு மந்நிலை, யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்:]

சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் அந்நிலை நிறுத்தல்—தத்தங்குலத்திற்கேற்ற குணங்களினமைதியும், மேம்பாடும், ஒழுக்கமும் பழையதன்மைகெட்டாற் பிறந்தவிழுக்கைப் போம்படிகழுவி விளங்கும்புகழை முன்புபோலே நிற்கும்படிநிறுத்தல்,

தொல் மருங்கு அறிஞர் ஆசு அறு காட்சி ஐயர்க்கும் எளிய என்னார்—பழைதாகிய நூலையறிவார் குற்றமற்ற அறிவினையுடைய தெய்வ இருடிகளுக்கும் எளியகாரியமென்னார்;

* "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்றாராகலின், ஐயர் தேவராகார்.

[மாதரு மடனு மோராங்குத் தணப்ப, நெடுந்தே ரெந்தை யருங்கடி நீவி:]

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௩.

நெடு தேர் எந்தை அரு கடி நீவி—நெடியதேரையுடைய என் தந்தையது அரிய காவலைக் கடந்து,

மாதரும் மடனும் ஓராங்குத் தணப்ப—இருமுதுகுரவரும் தமக்கியைந்தோர்க்குக் கொடுப்போமென்றிருக்கின்றகாதலும் எனதுமடனும் சேரப்போக,

[இருவே மாய்ந்த மன்ற லிதுவென:] இது இருவேம் ஆய்ந்த மன்றல் என—இந்தமணம் தலைவனும் யானும் பெருமையும் உரனும் அச்சமும் நாணும் நுணுகியநிலையாற்பிறந்த கந்தருவமணமென்று,

நாம் அறிவுறுலிற் பழியும் உண்டோ—நாம் யாய்க்கு அறிவுறுத்தலான் நமக்குப் புகழேயன்றி வருவதோர்பழியுமுண்டோ, அஃதில்லை;

உம்மை எச்சவும்மை. ஓகாரம் எதிர்மறை; இது மறைநூல் விதித்ததாகலின்.

ஆற்றின் வாராராயினும்—இங்ஙனம் அறத்தொடுநின்றபின் தலைவர்க்கே நம்மையடைய நேர்ந்திலராயினும்,

ஆற்ற—நாம் உயிர்போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருக்க,

[ஏனை யுலகத்து மியைவதா னமக்கென:] நமக்கு ஏனை உலகத்தும் இயைவதால் என—நமக்கு மறுபிறப்பினும் இக்கூட்டம் கூடுவதொன்றாயிருந்ததெனக்கூறி,

[மானமர் நோக்கங் கலங்கிக் கையற், றாஞுச் சிறுமைய ளிவளுந் தேம்பும்:] ஆனாச் சிறுமையள் மான் அமர் நோக்கம் கலங்கிக் கையற்று இவளும் தேம்பும்—ஆற்றுந்தன்மைத்தல்லாத நோயினையுடையளாய் மான்நோக்கமமர்ந்த நோக்கமின்றி மையனோக்கங்கொண்டு வினையொழிந்து அயர்ந்து இவளுமெலியும்;

இவளும் (உசு), கலங்கிக் (உரு) கெடிற் புணரும் (கச); அதுபோலன்றிச் சால்பு முதலியனகுன்றின் (கரு) நிறுத்தல் (கசு) எளியவென்னார் (கஎ) ஆகலின், இஃது இருவேமாய்ந்தமன்றலென (உக) அறிவுறுலிற் பழியுமில்லை (உஉ); ஆற்றின்வாராராயினும் ஆற்ற (உரு) ஏனையுலகத்தும் இயைவதாலெனக்கூறி (உச) மெலியு (உசு) மெனமுடிக்க.

* "வரைவிடை வைத்த காலத்து வருந்தினும், வரையா நாளிடை வந்தோன் முட்டினும், உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும், தானே கூறுங் காலமு முளவே." என்பதனுள் 'தானே கூறுங் காலமு முளவே' என்றதனால் உடையளாயெனத் தலைவிகூற்றினைக் கொண்டுகூறினாளென்றுணர்க. † "செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பு, மறிவு மருமையும் பெண்பா லான" என்பதனால் மறை புலப்படுத்தலாகாதென்றாராயினும், ‡ "உற்றுழி யல்லது சொல்ல லின்மையி, னப்பொருள் வேட்கை கிழவியி னுணர்ப." என்பதனான் மறைபுலப்படுத்தலுமாமென வழுவமைத்தலின், இங்ஙனம் தலைவிகூறினாள்.

இதனால் தோழிதலைப்பாடுகூறினாள்.

இகல் மீக் கடவும் இரு பெரு வேந்தர் வினை இடை நின்ற சான்றோர் போல—மாறுபாட்டின்மிகுதியைச்செலுத்தும் இருவராகிய பெரிய அரசரைச் சந்துசெய்விக்குந் தொழிலிடத்தேநின்ற அறிவுடையோரைப்போல,

இரு பேர் அச்சமோடு யானும் ஆற்றலேன்—நினக்கும் இவள்வருத்தத்திற்கு மஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே யானும் வருந்தாநின்றேன்;

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உக.
† ,, ,, பொருளியல், கரு.
‡ ,, ,, ,, கச.

கொடுப்பின் நன்கு உடைமையும்—கொடுத்தபின்பு எல்லாவற்ருனும் நன்ருகி முடிதலையும்,

குடி நிரல் உடைமையும்—ஒருகுடியாகாமல் இரண்டுகுடியும் ஒத்தலுடைமையையும்,

வண்ணமும்—குணத்தையும்,

துணையும்—சுற்றத்துதவிகளையும்,

பொரீஇ எண்ணுது—ஒப்பித்துப்பார்த்துப் பின்னரும் பலருடன் உசாவாதே,

* "செந்துறை, வண்ணப் பகுதி வரைவின் ருங்கே" என்பதனுல் வண்ணம் குணமென்றுணர்க.

எமியேம் துணிந்த ஏமம் சால் அருவினை—நும்மையின்றித் தமியேமாய் யாங்களேதுணிந்த உயிர்க்குப் பாதுகாவலமைந்த செய்தற்கரிய இக்கந்தருவமணம்,

தானும் புணர்ச்சிக்குப்பின் உடம்படுதலின், எமியேந்துணிந்தவென்ருள்.

நிகழ்ந்த வண்ணம்—முன்புநடந்தபடியை,

நீ நனி உணரச் செப்பல் ஆன்றிசின்—நீ மிகவுமறியும்படி சொல்லுதலையமைந்தேன்;

சினவாதீமோ—அதுகேட்டுச் சினவாதிருப்பாயாக;

நெற் கொள் நெடு வெதிர்க்கு அணந்த யானை—நெல்லைத் தன்னிடத்தேகொண்ட நெடிய மூங்கிலைத்தின்றற்கு மேனேக்கிநின்றுவருந்தின யானை அவ்வருத்தந்தீரும்படி,

முத்து ஆர் மருப்பின் இறங்கு கை கடுப்ப—முத்துநிறைந்த கொம்பிலே ஏறட்டு நான்ற கையையொப்ப,

துய்த் தலை வாங்கிய புனிறு தீர் பெருங்குரல் நல் கோள் சிறு தினைப் படு புள் ஓப்பி—துய்யையுடைய தலைவளைந்த ஈன்றணிமைதீர்ந்த பெரிய கதிர்களை நன்ருகத் தன்னிடத்தேகொள்ளுதலையுடைய சிறிய தினையிலேவீழ்கின்ற கிளிகளையோட்டி,

துய்-இளதானபருவத்துப் பஞ்சுநுனைபோன்றிருப்பது. கடுப்ப வளைந்தவென்க.

எல் பட வருதியர் என நீ விடுத்தலின்—பகற்பொழுதுகழியாநிற்க நீர்வருவீராகவென்றுகூறி நீ போகவிடுகையினுலே யாங்களும்போய்,

வருதியர் - வியங்கோண்முற்று.

கலி கெழு மீமிசைச் சேணேன் இழைத்த புலி அஞ்சு இதணம்—ஆரவாரம் பொருந்தின மரத்தினுச்சியிலே இராக்காலம் ஆகாயத்திருப்போன்பண்ணின புலி அஞ்சுகைக்குக்காரணமான பரண்,

"சேணேன் மாட்டிய நறும்புகை ஞெகிழி" என்ருர்பிறரும்.

[ஏறி யவண, சாரற் சூரற் றகைபெற வலந்த:] அவண சாரல் சூரல் தகை பெற வலந்த இதணம் (சுக) ஏறி—அவ்விடத்தனவாகிய மலைப்பக்கத்துப்பிரம்பாலே அழகுபெறத் தெற்றின இதணத்தேயேறி,

இனிச் சூரலாலேபிணித்த தழலென்றுமாம். சூரல் - சூரற்கொடியுமாம்.

தழலும்—தழலும், ·

தழலாவது கையாற்சுற்றினகாலத்துத் தன்னிடத்துப் பிறக்குமோசையாற் கிளிமுதலியவற்றை ஓட்டுங்கருவி; கவணென்பாருமுளர்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உஎ.

தட்டையும்—தட்டையும்,

தட்டையாவது மூங்கிலைக் கண்ணுக்கண்ணுள்ளாகநறுக்கிப் பலவாகப்பிளந்து ஓசையுண்டாக ஒன்றிலே தட்டுவதோர் கருவி.

குளிரும்—குளிரும்,

குளிராவது இவைபோல்வதோர் கிளிகடிகருவி.

பிறவும்—ஏனையவும்,

பிறவென்றது கவண்முதலியவற்றை.

கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி—தழலும் தட்டையும் குளிரும் பிறவுமாகிய கிளியோட்டுமுறைமையினையுடையவற்றை முறையேமுறையே கையிலேவாங்கி ஓட்டி,

உரவுக் கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து— மிகுதலையுடைய ஞாயிற்றின்கிரணங்கள்சுடும் வெம்மைவிளங்குகின்ற பொழுதிலே ஊழூழ்வாங்கி (சச) யென்க.

விசும்பு ஆடு பறவை வீழ் பதிப் படர—ஆகாயத்தேபறக்கும் பறவைகளெல்லாம் தாம்விரும்புஞ்சேக்கைகளிலே செல்லும்படியாக,

[நிறையிரும் பௌவங் குறைபட முகந்துகொண், டகலிரு வானத்து வீசுவளி கலாவலின், முரசதிர்ந் தன்ன வின்குர லேறொடு, நிரைசெல னிவப்பிற் கொண்மூ மயங்கி, யின்னிசை முரசிற் சுடர்ப்பூட் சேஎ, யொன்னார்க் கேந்திய விலங்கிலை யெஃகின், மின்மயங்கு கருவிய:]

நிறை இரும்பௌவம் குறைபட முகந்துகொண்டு முரசு அதிர்ந்து அன்ன இன்குரல் ஏறொடு நிரை செலல் நிவப்பிற் கொண்மூ—நிறைந்த கரியகடலைக் குறையுண்டாம்படிமுகந்துகொண்டு முரசு சிறிதுமுழங்கினாற்போன்ற இனியகுரலையுடைய உருமேற்றோடே நிரைத்துச்செல்லுதலையுடைய ஓக்கத்தினையுடையமேகம்,

இன்னிசை முரசின் சுடர்ப் பூண் சேஎய் ஒன்னார்க்கு ஏந்திய இலங்கு இலை எஃகின் மின் மயங்கு கருவிய—இனிய ஓசையையுடைத்தாகிய முரசினையும், ஒளியினையுடைத்தாகிய அணிகலங்களையுமுடையமுருகன் அசுரரைக் கொல்லுமதற்கெடுத்த விளங்குகின்ற இலைத்தொழிலையுடைய வேல்போல மின்னுமயங்குகின்ற தொகுதிகளையுடையவாய்,

அகல் இரு வானத்து வீசு வளி கலாவலின் மயங்கி—ஏனைப்பூதங்கள் விரிதற்குக்காரணமான கரியஆகாயத்திடத்தே வீசுகின்ற காற்றுத் தன்னிடத்தே கூடுகையினாலே நிரைத்தநிரைபோய்க் கலங்கி,

கல் மிசைப் பொழிந்தென—மலைமேலே பெய்தவாக,

கொண்மூக் (ருo) கருவியவாய் (ருரு) மயங்கிப் (ருo) பறவை பதிப்படரப் (சசு) பொழிந்தென (ருரு) வென்க.

அண்ணல் நெடுங்கோட்டு இழிதரு தெண்ணீர் அவிர் துகில் புரையும் அவ்வெள் அருவி தவிர்வு இல் வேட்கையேம் தண்டாது ஆடி—தலைவனுடைய நெடிய மலைச்சிகரத்தினின்றுங்குதிக்கின்ற தெளிந்த நீரையுடைய விளங்குகின்ற வெள்ளிய துகிலையொக்கும் அழகிய வெள்ளிதாகிய அருவியிலே நீங்குதலில்லாத விருப்பையுடையேமாய் அமையாமல் விளையாடி,

அண்ணன்மலையில் அருவியெனவே நிலமொன்றென்றாள்.

[பளிங்குசொரி வன்ன பாய்சுனை குடைவுழி, நளிபடு சிலம்பில்:] நளி படு சிலம்பிற் பளிங்கு சொரிவு அன்ன பாய் சுனை குடைவுழி—செறிவுண்டானமலையிடத்

துப் பளிங்கைக்கரைத்துச் சொரிந்துவைத்தாற்போன்ற பரந்தசுனையைக் குடைந்து விளையாடுகின்றவிடத்தே,

பாயம் பாடி—எங்கள்மனத்துக்கு விருப்பமானவற்றைப் பாடி,

பொன் எறி மணியிற் சிறுபுறம் தாழ்ந்த எம் பின் இருங்கூந்தல் பிழிவனம் துவரி—பொன்னிலேயழுத்தின நீலமணிபோலே சிறிய முதுகிடத்தே தாழ்ந்துகிடந்த எம்முடைய பின்னுதலையுடைய கரியகூந்தலை நீரைப்பிழிந்து ஈரத்தைப்புலர்த்தி,

உள் அகம் சிவந்த கண்ணேம் — உள்ளாகிய இடமெல்லாஞ் சிவந்த கண்ணேமாய்,

வள் இதழ் ஒள் செங்காந்தள்—பெரிய இதழையுடைய ஒள்ளிய சிவந்த கோடற்பூ,

ஆம்பல் அனிச்சம்—ஆம்பற்பூ அனிச்சப்பூ,

தண் கயக் குவளை—குளிர்ந்த குளத்திற்பூத்த செங்கழுநீர்ப்பூ,

குறிஞ்சி—குறிஞ்சிப்பூ,

வெட்சி—வெட்சிப்பூ,

செங்கொடுவேரி—செங்கொடுவேரிப்பூ,

* தேமா—தேமாம்பூ,

மணிச்சிகை—செம்மணிப்பூ,

உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ்—தனக்கு உரித்தாக நாறும் விரிந்த கொத்தினையுடைய பெருமூங்கிற்பூ,

கூவிளம்—வில்வப்பூ,

எரி புரை எறுழம்—நெருப்பையொத்த எறுழம்பூ,

சுள்ளி—மராமரப்பூ,

கூவிரம்—கூவிரப்பூ,

வடவனம்—வடவனப்பூ,

வாகை—வாகைப்பூ,

வான் பூங் குடசம்—வெள்ளிய பூவினையுடைய வெட்பாலைப்பூ,

எருவை—பஞ்சாய்க்கோரை,

கொறுக்கச்சியுமாம்.

செருவிளை—வெண்காக்கணம்பூ,

மணிப் பூங் கருவிளை—நீலமணிபோலும் பூக்களையுடைய கருவிளம்பூ,

பயினி—பயினிப்பூ,

வானி—வானிப்பூ,

பல் இணர்க் குரவம்—பல இதழ்களையுடைய குரவம்பூ,

பசும்பிடி—பச்சிலைப்பூ,

வகுளம்—மகிழம்பூ,

பல் இணர்க் காயா—பல கொத்துக்களையுடைய காயாம்பூ,

விரி மலர் ஆவிரை—விரிந்த பூக்களையுடைய ஆவிரம்பூ,

வேரல்—சிறுமூங்கிற்பூ,

---

* 'தேமா' என்பதுமுதல் 'பெருமூங்கிற்பூ' என்பதிறுதியாகவுள்ளவைகள் தருமபுரவாதீனமடத்திலிருந்துகிடைத்த ஒரு பழைய ஏட்டுப்புத்தகத்தில் மட்டும் இருந்தன.

சூரல்—சூரைப்பூ,
சூரீஇப்பூளை—சிறுபூளை,
குறுநறுங்கண்ணி—குன்றிப்பூ,
குருகிலை—முருக்கிலை,
மருதம்—மருதப்பூ,
விரி பூங் கோங்கம்—விரிந்த பூக்களையுடைய கோங்கம்பூ,
போங்கம்—மஞ்சாடிப்பூ,
திலகம்—மஞ்சாடி மரத்தின்பூ,
தேங்கமழ் பாதிரி—தேனூறும் பாதிரிப்பூ,
செருந்தி—செருந்திப்பூ,
அதிரல்—புனலிப்பூ,
பெருந்தண் சண்பகம்—பெரிய குளிர்ந்த சண்பகப்பூ,
கரந்தை—நாறுகரந்தை,
குளவி—காட்டுமல்லிகைப்பூ,
கடி கமழ் கலி மா—விரைகமழும் தழைத்த மாம்பூ,
தில்லை—தில்லைப்பூ,
பாலை—பாலைப்பூ,
கல் இவர் முல்லை—கல்லிலேபடர்ந்த முல்லைப்பூ,
குல்லை—கஞ்சங்குல்லைப்பூ,
பிடவம்—பிடவம்பூ,
சிறுமாரோடம்—செங்கருங்காலிப்பூ,
வாழை—வாழைப்பூ,
வள்ளி—வள்ளிப்பூ,
நீள் நறு நெய்தல்—நீண்ட நறிய நெய்தற்பூ,
தாழை—தெங்கிற்பாளை,
தளவம்—செம்முல்லைப்பூ,
முள் தாள் தாமரை—முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்பூ,
ஞாழல்—ஞாழற்பூ,
மௌவல்—மௌவற்பூ,
நறும் தண் கோகுடி—நறிய குளிர்ந்த கோகுடிப்பூ,
சேடல்—பவழக்கான் மல்லிகைப்பூ,
செம்மல்—சாதிப்பூ,
சிறுசெங்குரலி—கருந்தாமக்கொடிப்பூ,
கோடல்—வெண்கோடற்பூ,
கைதை—தாழம்பூ,
கொங்கு முதிர் நறு வழை—தாதுமுதிர்ந்த நறிய சுரபுன்னைப்பூ,
காஞ்சி—காஞ்சிப்பூ,
மணிக் குலைக் கள் கமழ் நெய்தல்—நீலமணிபோலுங் கொத்துக்களையுடைய தேனூறும் கருங்குவளை,
பாங்கர்—ஓமை,
மராஅம்—மரவம்பூ,
பல் பூந் தணக்கம்—பல பூக்களையுடைய தணக்கம்பூ,

ஈங்கை—இண்டம்பூ,
இலவம்—இலவம்பூ,
தூங்கு இணர்க் கொன்றை—தூங்குகின்ற பூங்கொத்தினையுடைய கொன்றைப்பூ,
அடம்பு—அடம்பம்பூ,
அமர் ஆத்தி—பொருந்தின ஆத்திப்பூ,
நெடு கொடி அவரை—நெடிய கொடியினையுடைய அவரைப்பூ,
பகன்றை—பகன்றைப்பூ,
இது சிவதை; *"பகன்றைப்பூ வுறநீண்ட பாசிலைத் தாமரை" என்புழி வெள்ளி வட்டில் உவமைகோடலின், இது கிலுகிலுப்பையன்று.
பலாசம்—பலாசம்பூ,
பல் பூம் பிண்டி—பல பூக்களையுடைய அசோகம்பூ,
வஞ்சி—வஞ்சிப்பூ,
பித்திகம்—பிச்சிப்பூ,
சிந்துவாரம்—கருநொச்சிப்பூ,
தும்பை—தும்பைப்பூ,
துழாஅய்—திருத்துழாய்ப்பூ,
சுடர்ப் பூந்தோன்றி—விளக்குப்போலும் பூவினையுடைய தோன்றிப்பூ,
நந்தி—நந்தியாவட்டப்பூ,
நறவம்—நறைக்கொடி,
நறும் புன்னாகம்—இது புன்னையின்விசேடம்,
பாரம்—பருத்திப்பூ,
பீரம்—பீர்க்கம்பூ,
பைங் குருக்கத்தி—பசிய குருக்கத்திப்பூ,
ஆரம்—சந்தனப்பூ,
காழ்வை—அகிற்பூ,
கடி இரும் புன்னை—மணத்தையுடைய பெரிய புன்னைப்பூ,
நரந்தம்—நாரத்தம்பூ,
நாகம்—நாகப்பூ,
நள்ளிருணாறி—இருவாட்சிப்பூ,
மா இருங் குருந்தும்—கரிய பெரிய குருந்தம்பூவும்,
வேங்கையும்—வேங்கைப்பூவும்,
[பிறவு, மரக்குவிரித் தன்ன பரேரம் புழகுடன், மாலங் குடைய:] அங்கு மால் உடைய அரக்கு விரித்தன்ன பிறவும் பரேரம்புழகுடன்—அச்சாரலிடத்துத் தம்மில் மயக்கமுடையவாய்ச் சாதிலிங்கத்தைப் பரப்பினாற்போன்ற பிறபூக்களையும் பருத்த அழகினையுடைய † மலையெருக்கம்பூவுடனே,
பரேரம்புழகு - செம்பூவுமாம்; புனமுருங்கையுமென்பர்.
மலிவனம் மறுகி—பூக்களிடத்தே மனவேட்கைமிக்குப் பலகாலுந் திரிந்து பறித்து,
வான் கண் கழீஇய அகல் அறைக் குவைஇ—மழை பெய்து தன்னிடத்தைக் கழுவித் தூய்தாக்கின அகன்ற பாறையிலே குவித்து,

* கலித்தொகை, மருதம், அ.
† மலைவெருக்கம் பூவெனவும் பிரதிபேதமுண்டு.

கண்ணேமாய் (சுக) மலிவனமறுகிப் (கூஎ) பரோரம்புழகுட னே (கூசு) ஒண்செங்காந்தள் (சுஉ) முதலியவற்றையும் பிறவற்றையும் (கூகு) பாறையிலேகுவித்து (கூஅ) எனமுடிக்க.

செங்காந்தள் முதலியவற்றிற்கெல்லாம் இரண்டாமுருபும் உம்மையும் விரிக்க. குருந்தும், வேங்கையும், பிறவுமென்ற மூன்றற்கும் உருபுவிரிக்க.

புள் ஆர் இயத்த—பறவைகளின் ஓசையாகிய நிறைந்த வாச்சியங்களையுடையவாகிய,

விலங்கு மலைச் சிலம்பின்—ஒன்றற்கொன்று குறுக்கிட்டுக்கிடக்கின்ற மலைப்பக்கத்திற்புனத்தே,

வள் உயிர்த் தெள் விளி இடையிடை பயிற்றிக் கிள்ளை ஓப்பியும்—பெரிய ஓசையினையுடைய தெளிந்தசொற்களை நடுவேநடுவேசொல்லிக் கிளியை ஓட்டுதலைச் செய்தும் தழைதைஇ (கoஉ) யென்க.

சொல் – கிளியையோட்டுஞ்சொல். கிளியையும்மோப்பியெனச் சிறப்பும்மை.

கிளை இதழ் பறியா—புறவிதழ்களை வாங்கிப்போகட்டு,

பை விரி அல்குற் கொய் தழை தைஇ—பாம்பின்படத்தைப்போலே பரந்த அல்குலுக்குத் தழையைக்கட்டியுடுத்து,

கொய்தழை – மிக்கவிடங்களை நறுக்கினதழை.

பல் வேறு உருவின் வனப்பு அமை கோதை எம் மெல் இரு முச்சிக் கவின் பெறக் கட்டி—பலவாய் வேறுபட்ட நிறத்தையுடைய அழகமைந்த மாலைகளை எம்முடைய மெல்லிய கரியமுடியிலே அழகுபெறச்சுற்றி,

எரி அவிர் உருவின் அம் குழைச் செயலைத் தாது படு தண் நிழல் இருந்தனமாக—நெருப்புப்போலவிளங்கும் நிறத்தையுடைய அழகிய தளிரையுடைய அசோகினது தாதுவிழுகின்ற குளிர்ந்த நிழலிலே இருந்த அளவிலே,

[எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்:]

சுரிவளர்நறுங்காழ் - பின்னேகூட்டுதும்.

எண்ணெய் நீவிய நலம்பெறு சென்னி (ககசு)—பலகாலும் எண்ணெய்வார்த்த நன்மையைப்பெற்ற தலையிற் குஞ்சி (ககஉ) யென்க.

தண் நறும் தகரம் கமழ மண்ணி—குளிர்ந்த நறிய மயிர்ச்சந்தனத்தை நாறும்படியாகப்பூசி,

ஈரம் புலர விரல் உளர்ப்பு அவிழா—அந்த ஈரம்புலரும்படி விரலாலலைத்துப் புலர்த்துதற்றொழிலாலே பிணிப்பைவிடுத்து,

நறும் காழ்க் (கoஎ) காழ் அகில் அம் புகை கொளீஇ—அதனை நறிய கரிய வயிரத்தினையுடைய அகிலினது அழகிய புகையூட்டுகையினாலே,

இதில் நறுங்காழ் கூட்டிற்று.

யாழ் இசை அணி மிகு வரி மிஞிறு ஆர்ப்பத் தேம் கலந்து—யாழோசையினது அழகுமிகுகின்ற பாட்டினையுடைய மிஞிறுகள் ஆரவாரிக்கும்படி அகிலினது நெய் கலந்து,

[மணிநிறங் கொண்ட மாயிருங் குஞ்சியின்:]

மணி நிறம் கொண்ட சுரி வளர் (கoஎ) மா இருங் குஞ்சியின்—நீலமணியினது

நிறத்தைத் தன்னிடத்தேகொண்ட கடைகுழன்றுவளர்ந்த கரிய பெரிய மயிரின் கண்ணே,

இதிற் சுரிவளர் கூட்டிற்று.

மண்ணி (௧௦௮) அவிழாப் (௧௦௯) புகைகொளுவுகையினாலே (௧௧௦) தேங்கலந்து (௧௧௧) ஒருகாழ்வளைஇ (௧௧௮) மணிநிறங்கொண்ட குஞ்சி (௧௧௨) யென்க.

மலையவும் நிலத்தவும் சினையவும் சுனையவும்—மலையிடத்தனவும் நிலத்திடத்தனவும் கொம்புகளிற் பூத்தனவும் சுனைகளிற்பூத்தனவுமாகிய,

வண்ண வண்ணத்த மலர்—பலநிறங்களையுமுடையமலர், பலசாதிகளையுமுடையமலரென ஒன்று நிறமும் ஒன்று சாதிவேறுபாடுங் கூறினார்.

ஆய்பு விரைஇய தண் நறும் தொடையல் வெள்போழ்க் கண்ணி—அம்மலரை ஆராய்ந்துதொடுத்த தண்ணிய நறிய தொடையலினையும் வெள்ளிய தாழைமடலிலேயுடைத்தாகிய கண்ணியினையும்,

[நலம்பெறு சென்னி நாமுற மிலைச்சி:]

நாம் உற மிலைச்சி—முருகனென்றச்சமுறும்படி சூடி,

குஞ்சியின்கண்ணே (௧௧௨) மிலைச்சியென்க.

நலம்பெறுசென்னி - முன்னேகூட்டிற்று.

பைங்காற் பித்திகத்து ஆயிதழ் அலரி அம் தொடை ஒருகாழ் வளைஇ—பசிய காம்பினையுடைய பிச்சியினுடைய அழகியஇதழ்களையுடைய பூவைத்தொடுத்த அழகினையுடைய தொடையாகிய ஒருவடத்தைச் சுற்றி,

இஃது அந்திக்காலத்துமலரும் பூவாதலின், அதனைத் தேங்கலந்து (௧௧௧) ஒருகாழ்வளைஇ (௧௧௮) மணிநிறங்கொண்டகுஞ்சி (௧௧௨) யெனக் குஞ்சிக்கியல்பாக்கி முன்னேகூட்டுக.

[செந்தீ, யொண்பூம் பிண்டி யொருகாது செரீஇ, யந்தளிர்க் குவவுமொய்ம் பலைப்ப:] குவவு மொய்ம்பு அலைப்பச் செந்தீ ஒள் பூம்பிண்டி அம் தளிர் ஒருகாது செரீஇ—திரளுதலையுடைய தோள்மேலேவீழ்ந்தலைக்கும்படி சிவந்த நெருப்புப்போலும் ஒள்ளிய பூக்களையுடைய அசோகினது அழகிய தளிரை ஒருகாதிலே செருகி,

சாந்து அருந்தி மைந்து இறைகொண்ட மலர்ந்து ஏந்து அகலத்துத் தொன்றுபடு பூணொடு நறும் தார் பொலிய—சந்தனத்தையுள்ளடக்கி வலிதங்குதல்கொண்ட அகன்றுயர்ந்த மார்பிடத்தே தொன்றுபட்டுவருகின்ற பேரணிகலங்களோடே நறிய மாலை பொலிவுபெற,

செம்பொறிக்கு ஏற்ற — மூன்றுவரியாகிய உத்தமவிலக்கணத்திற்குப் பொருந்தின மார்பு (௧௨௧) என்க.

வீங்கு இறைத் தடக் கையின் வண்ண வரி வில ஏந்தி அம்பு தெரிந்து—பூணிறுகின முன்கையையுடைய பெரியகையிலே வண்ணத்தையுடைய வரிந்த வில்லையெடுத்து அம்புகளைத்தெரிந்துபிடித்து,

நுண் வினைக் கச்சைத் தயக்கு அறக் கட்டி—நுண்ணிய தொழில்களையுடைய கச்சைக் கட்டினசேலை துளக்கமறக்கட்டி,

[இயலணிப் பொலிந்த வீகை வான்கழ, றுயல்வருந் தோறுந் திருந்தடிக் கலாவ:] ஈகை இயல் அணிப் பொலிந்த வான் கழல் துயல்வருந்தோறும் திருந்து அடிக்

கலாவ—பொன்னாற்செய்யப்பட்ட பூண்களிற்பொலிவுபெற்ற நன்றாகிய வீரக்கழல் பெயரும்பொழுதெல்லாம் பிறக்கிடாத அடியிலே ஏற்றிழிவுசெய்ய,

முனை பாழ் படுக்கும் துன்னருந் துப்பிற் பகை புறங் கண்ட பல் வேல் இளைஞரின்—பகைப்புலத்தைப் பாழாக்கும் கிட்டுதற்கரிய வலியையுடைய பகைகளை முதுகு கண்ட பலவேலினையுடைய வீரரைப்போலே,

உரவுச் சினம் செருக்கித் துன்னுதொறும் வெகுளும் முளை வாள் எயிற்ற வள் உகிர் ஞமலி—பரக்கின்ற சினத்தாலே செருக்கித் தம்மேலொன்று நெருங்குந்தோறும் கோபிக்கும் மூங்கில்முளைபோலும் ஒளியையுடைத்தாகிய பல்லினையுடையவாகிய பெரிய உகிரையுடைய நாய்,

திளையாக் கண்ண வளைகுபு நெரிதர—இமையாக்கண்களையுடையவாய் எம்மை வளைத்துக்கொண்டு மேலேமேல்வருகையினாலே,

[நடுங்குவன மெழுந்து நல்லடி தளர்ந்தியா, மிடும்பைகூர் மனத்தே மருண்டு புலம் படர:] யாம் நடுங்குவனம் எழுந்து நல்லடி தளர்ந்து இடும்பை கூர் மனத்தேம் மருண்டு புலம் படர—யாங்களஞ்சி அவ்விருப்பைக்குலைந்து கடிதிற்செல்லுதலாற்றாது வருத்தமிக்க மனத்தையுடையேமாய் மயங்கி வேற்றுப் புலத்தேறச்செல்லாநிற்க,

மாறு பொருது ஓட்டிய புகல்வின் வேறு புலத்து ஆ காண் விடையின் அணி பெற வந்து—தனக்குமாறாகியவிடைகளையெல்லாம் பொருதுகெடுத்த மனச்செருக்கினையுடைய தானறியாதநிலத்திற் புதிய ஆவைக்காணுமேறுபோலே அழகுபெற வந்து,

வேட்கைமிகுதிகூறுதற்கு வேறுபுலத்து ஆவென்றார்.

இத்துணையும் ஒக்கக்கூறினார்.

[எம், மலமர லாயிடை வெரூஉத லஞ்சி, மெல்லிய வினிய மேவரக் கிளந்து:] ஆயிடை எம் அலமரல் வெரூஉதல் அஞ்சி மெல்லிய இனிய மேவரக் கிளந்து—யாங்கள்போகின்றபொழுது எம்மனத்திற் சுழற்சியாலே வெருவுதற்குத் தானஞ்சி மெல்லியவாய் இனியவாயிருக்கின்ற சொற்களை எமக்குப்பொருந்துதல்வரச் சொல்லி,

இதனால் ஏதிலகூறினான்.

எம் ஐம்பால் ஆய் கவின் ஏத்தி—எம் ஐவகைப்பட்ட மயிரினையுடைய பலருமாராய்ந்த அழகைப்புகழ்ந்து அசைகின்ற (கசo) இளையீ (கசக) ரென்க.

ஒண்டொடி—ஒள்ளிய தொடியினையும்,

அசை - வேறுகூறிற்று.

மென் சாயல்—மெல்லிய மென்மையினையும்,

அவ்வாங்கு உந்தி—அழகிய வளைந்த கொப்பூழினையும்,

மடமதர் மழைக் கண் இளையீர்—மடப்பத்தையுடைய மதர்த்த குளிர்ந்த கண்ணினையுமுடைய இளையீரே,

இறந்த கெடுதியும் உடையேன் என்றனன்—இவ்விடத்தேபோந்த கெடுதிகள் பலவுமுடையேனென்றுகூறினான்;

என்றது - அவை யானை கலை பன்றிமுதலியன கெடுத்தனனாக வினாயினான்.

குஞ்சியின்கண்ணே (ககஉ) மிலைச்சிச் (ககரு) செரீஇப் (ககக) பொலியக் (கஉஉ) கலாவக் (கஉஎ) கட்டி (கஉகு) ஏந்தித் தெரிந்து (கஉச) விடையின் அணிபெறவந்து (கங௫) தான்கொண்டுவந்த ஞமலி (கங௧) நெரிதருகையினாலே (கஙஉ) எழுந்து தளர்

ந்து (௧௫௫) மருண்டு வேறுபுலம்படராகிற்க (௧௫௬) ஆயிடை (௧௫௭) எம் (௧௫௯) அலமரல் வெரூஉதலைஞ்சிக் (௧௫௭) கிளர்ந்து (௧௫௮) ஏத்தி (௧௫௯) இளையீர், இறந்த (௧௬௧) கெடுதியுமுடையே னென்றனன (௧௬௨) னெனக் கூட்டுக.

[அதனெதிர், சொல்லே மாதலி னல்லாந்து கலங்கி:] அல்லாந்து அதன் எதிர் சொல்லேமாதலிற் கலங்கி—அவன்கூற்றிற்கு யாங்கள் மகிழ்ந்து அதற்கு மறுமொழி கொடேமாகையினாலே நெஞ்சழிந்து,

[கெடுதி யும்விடா ராயி னெம்மொடு, சொல்லும் பழியோ மெல்லிய லீரென:] மெல்லியலீர் கெடுதியும் விடாராயின் எம்மொடு சொல்லும் பழியோ என—மெல்லிய இயல்பினையுடையீர், கெட்டனவுங் காட்டித்தாரீராயின் எம்முடன் ஒருவார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாமோவெனச் சொல்லி,

[நைவளம் பழுநிய பாலை வல்லோன், கைகவர் நரம்பி னிம்மென விமிரு, மாதர் வண்டொடு சுரும்புநயந் திறுத்த:] நைவளம் பழுநிய பாலை வல்லோன் கைகவர் நரம்பின் இம்மென இமிரும் மாதர் வண்டொடு நயந்து இறுத்த சுரும்பு—நட்டராகம் முற்றுப்பெற்ற பாலையாழை வாசிக்கவல்லவன் தன்கையாலே வாசித்தநரம்புபோலே இம்மென்னும் ஓசைபட வொலிக்கும் காதலையுடைய வண்டினத்தோடே தன்னிடத்து மணத்தைவிரும்பித்தங்கின சுரும்பினங்களை,

தாது அவிழ் அலரித் தா சினை பிளந்து—தாதுவிரிந்த பூக்களையுடைய தழைபரந்ததோர்கொம்பை முறித்து,

தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி—தன்னைச் செலுத்துகின்ற பரிக்கோலைக் கைகடந்த மதக்களிறுபோலே வெற்றியுண்டாக ஓட்டி,

தனக்குக்காவலாகிய பெருமையினையும் உரனையும் கைகடந்து வேட்கைமீதூர்ந்து நிற்றலால் 'தாறடுகளிற்றை உவமங்கூறினார். மதக்களிற்றிற்கு அங்ஙனமோச்சி நிற்றல் இயல்பு.

கல்லென் சுற்றக் கடுங் குரல் அவித்து—கல்லென்னும் ஓசைபடக் கத்தும் வேட்டைநாய்களுடைய கடிய குரல்களை யடித்துமாற்றி,

எம் சொல்லற் பாணி நின்றனனாக—யாங்கள் வார்த்தைசொல்லுதலையுடையதோர் காலத்தைப் பார்த்துநின்றானாக,

கெடுதியுமுடையே னென்றனன்; அதனெதிர் (௧௬௨) யாங்கள் சொல்லேமாதலிற் கலங்கி (௧௬௩) மெல்லியலீர், சொல்லும்பழியோவெனச்சொல்லி (௧௬௫) ஓச்சி (௧௭௦) அவித்துச் (௧௭௧) சொல்லற்பாணி நின்றனனாக (௧௭௨)வெனக் கூட்டுக.

இத்துணையும் வேட்கைகூறினாள்.

இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பைப் பிணை ஏர் நோக்கின் மனையோள் மடுப்ப—தினையரிந்த தாளாலேவேய்ந்த குறியகால்களையுடைய குடிலிலிருக்கும் மான்பிணையை யொத்த பார்வையினையுடைய மனைவி எடுத்துக்கொடுப்ப,

தேம் பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து சேமம் மடிந்த பொழுதின்—தேனாற்சமைத்த கட்டெளிவையுண்டு மகிழ்ச்சிமிக்குக் காவற்றொழிலை மறந்தகாலத்தே,

[வாய்மடுத், திரும்புன நிழத்தலிற் சிறுமை நோனாது, அரவுற ழஞ்சிலை கொளீஇ நோய்மிக்கு:]

இரும் புனம் வாய்மடுத்து நிழத்தலில் சிறுமை நோனாது நோய் மிக்கு—பெரி

யபுனத்தை வேழந்தின்று நோக்கிவிடுகையினாலே தப்பிநின்றது விளையும் சிறுமையைப்பொருதே வருத்தமிக்கு,

[உரவுச் சினம்]

உரவுச் சின அரவு உறழ் அம் சிலை கொளீஇ—பரக்கின்றசினத்தையுடைய பாம்பையொத்த அழகினையுடைய வில்லைநாணேற்றி,

உரவுச்சின அரவுற ழஞ்சிலை கொளீஇ (கடுஅ) எனப் பின்னேகூட்டுக. பாம்பு வடிவிற்கும் கொலைத்தொழிலுக்கு முவமை.

முன்பால் உடல் சினஞ் செருக்கிக் கணை விடுபு— மெய்வலியோடே கோபித்தலாற்பிறந்த சினத்தாலே மயங்கி அம்பையெய்து,

விடுபு - விகாரம்.

புடையூ—தட்டையைப் புடைத்து,

கானம் கல்லென மடி விடு வீளையர் வெடிபடுத்து எதிர—காடெல்லாம் கல்லென்னுமோசை பிறக்கும்படி வாயைமடித்து விடுகின்ற சீழ்க்கையராய் மிக்கவோசையையுண்டாக்கி அக்களிற்றைப் புனத்தினின்றும் ஓட்டுகையினாலே,

ஆர்த்தெனவும் பாடம்.

[கார்ப்பெய லுருமிற் பிளிறிச் சீர்த்தக, விரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு, மையல் வேழ மடங்கலி னெதிர்தர:]

சினம் திகழ் கடாம் செருக்கி மையல் வேழம்—சினம் விளங்குதற்குக் காரணமாகிய மதத்தாலே மனஞ்செருக்கி மயக்கத்தையுடைத்தாகிய யானை,

மரம் கொல்பு—மரங்களை முறித்து,

கார்ப் பெயல் உருமிற் பிளிறி—கார்காலத்துமழையின் உறுமேறுபோல முழக்கத்தையுண்டாக்கி,

சீர்த்தக இரும்பிணர்த் தடக் கை இரு நிலம் சேர்த்தி ஒய்யென (கசுகு) மடங்கலின் எதிர்தர—தன்தலைமைக்குத் தக்கதாகக் கரிய சருச்சரையையுடைத்தாகிய பெரிய கையைச் சுருட்டி நிலத்தேயெறிந்து கடுகக் கூற்றுவனைப்போலே எங்கள்மேலே வருகையிலே,

[உய்விட மறியே மாகி யொய்யெனத், திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து, விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்தி:]

ஒய்யென - முன்னேகூட்டிற்று.

உய்விடம் அறியேமாகி விதுப்புறு மனத்தேம்—உயிர்கொண்டு பிழைப்பதோரிடத்தை ஆண்டு வேறுணரேமாகி நடுக்கமுற்ற மனத்தையுடைய யாங்கள்,

நாணு மறந்து திருந்து கோல் எல் வளை தெழிப்ப விரைந்து அவற்பொருந்தி—உயிரினுஞ் சிறந்த நாணைக்காத்தலை மறந்து திருந்திய திரட்சியையுடைத்தாகிய ஒளியினையுடைய வளையொலிப்ப விரைந்துசென்று அவனைச்சேர்ந்து,

சூர் உறு மஞ்ஞையின் நடுங்க—தெய்வமேறின மயில்போலே நடுங்காநிற்க,

[வார்கோ, லுடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை, யண்ணல் யானை யணிமுகத் தழுத்தலின்:] வார் கோல் உடுவுறும் கடு விசைப் பகழி வாங்கி அண்ணல் யானை அணி முகத்து அழுத்தலின்—நெடிய கோலையுடைய உடுச்சேர்ந்த கடியவிசையினையுடைய

அம்பை நிரம்பவலித்துத் தலைமையினையுடைய யானையினது அழகியமுகத்தே எய்கையினாலே,

உடு - நாணைக்கொள்ளுமிடம்.

[புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப், புள்ளி வரிநுதல் சிதைய நில்லா, தயர்ந்துபுறங் கொடுத்த பின்னர் நெடுவேள், ளணங்குறு மகளி ராடுகளங் கடுப்ப:]

புள்ளி வரி நுதல் சிதையப் புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து நெடுவேள் அணங்கு உறு மகளிர் ஆடுகளம் கடுப்ப இழிதர—புள்ளியினையும் புகரினையுமுடைய மத்தகம் அழகழியும்படி அம்புபட்டு உருவின புண்களால் உமிழப்படுங்குருதி முகத்தேபரந்து முருகனால்வருத்தமுற்ற மகளிர்க்கு மறியறுத்தாடுங் களத்திற் குருதிகுதிக்குமாறுபோலக் குதிக்கையினாலே,

அயர்ந்து நில்லாது புறங் கொடுத்த பின்னர்—தன்னைமறந்து ஆண்டுநிற்றலாற்றாது முதுகிட்டுப்போன பின்பு,

இதனாலும் எதிகூறினான்.

மகளிராடுங்களம் கடப்பமாலைவளைத்தாற்போல மிகவுங் கடப்பமாலை வளைத்தவென்பாருமுளர்.

திண் நிலைக் கடம்பின் திரள் அரை வளைஇய துணை அறை மாலையிற் கை பிணி விடேம்—திண்ணிய நிலையினையுடைய கடம்பினது திரண்டமுதலை நெருங்கச்சூழ்ந்த மகளிரொழுங்கிற்கு ஒப்புச்சாற்றுதலையுடைய மாலைபோலே கைகோத்தலை விடேமாய்,

நுரை உடைக் *கலுழி பாய்தலின்—யாற்றின் நுரையையுடைய பெருக்கிலே குதிக்கையினாலே,

உரவுத் திரை அருங்கரை வாழையின் நடுங்க— அதனிடத்துப் பரக்கின்ற திரைமோதி இடிகரையினின்ற வாழைபோலே கால்தளர்ந்து பின்னர் ஒழுகினேமாக, அதுகண்டு,

[பெருந்தகை, யஞ்சி லோதி யசையல் யாவது, மஞ்ச லோம்புநி னணிநல னுகர்கென:] பெருந்தகை அம் சில் ஓதி அசையல் நின் அணி நலன் நுகர்கு யாவதும் அஞ்சல் ஓம்பு என—பெரிய தகுதிப்பாடுடைய அழகிய சிலவான மயிரினையுடையாய், இங்ஙனங் காறளர்ந்தொழுகாதேயென்றெடுத்து யான் நின் அழகியநலத்தை நுகர்வேன்; நின்னைநீங்குவேனென்று சிறிதும் அஞ்சுதலைப்பரிகரியெனச் சொல்லி,

மாசு அறு சுடர் நுதல் நீவி—குற்றமற்ற ஒளியினையுடைய நுதலைத்துடைத்து,

நீடு நினைந்து என் முகம் நோக்கி நக்கனன்—நெடுநாள் இக்களவொழுக்கம் நிகழவேண்டுமென்று நினைந்து என்முகத்தைப்பார்த்துச் சிரித்தான்;

[அந்நிலை, நாணு முட்கு நண்ணுவழி யடைதர, வொய்யெனப் பிரியவும் விடாஅன்:]

அந்நிலை பின்னே கூட்டிற்று.

நண்ணுவழி நாணும் உட்கும் அடைதர ஒய்யெனப் பிரியவும் விடான்—அங்ஙனம் அவனணுகாநின்றவிடத்துத் தனக்கு இயல்பாகியநாணமும் அச்சமும் அவ்விடத்தேவந்து தோன்றுகையினாலே விரையத் தன்னிடத்து நின்றும் இவள் நீங்கவும் விடானாய்,

[கவைஇ, யாக மடைய முயங்கலின்:] அந்நிலை கவைஇ ஆகம் அடைய முயங்க

வின்—அங்ஙனம் நின்றநிலையிலே கையாலேயணைத்து இவள்மார்பு தன்மார்பிலே யொடுங்கும்படி தழுவுகையினாலே,

இதனால் ஏதிடும் வேட்கையுரைத்தலுங் கூறினாள்.

[அவ்வழிப், பழுமிள குக்க பாறை நெடுஞ்சுனை:]

பழு மிளகு உக்க பாறை நெடுஞ் சுனை—பழுத்த மிளகுசிந்திக்கிடக்கின்ற கற்பாறையிடத்து நீண்டசுனையிலே,

முழு முதற் கொக்கின் தீங் கனி உதிர்ந்தென—பெரிய அடியினையுடைய மாவினுடைய இனியபழங்கள் உதிர்ந்தனவாக அப்பழத்தாலும்,

[புள்ளெறி பிரசமொ டீண்டிப் பலவி, னெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்:]

பலவின் நெகிழ்ந்து உகு நறும் பழம்—பலவினுடைய விரிந்து தேன்பாய்கின்ற நறியபழத்தாலும்,

விளைந்த தேறல்—உண்டான கட்டெளிவு,

புள் எறி பிரசமொடு ஈண்டி—நிரம்புதலால் தன்னை நுகர்கின்ற ஈயினைத்தள்ளியுகுத்த தேனாலே வந்துதிரளுகையினாலே,

நீர் செத்து அயின்ற தோகை—தனக்கு எளிய நீராகக்கருதி அத்தேறலையுண்ட மயில்,

[வியலூர்ச், சாறுகொ ளாங்கண் விழவுக்கள நந்தி:] சாறு கொள் ஆங்கண் வியல் ஊர் விழவுக் களம் நந்தி— விழாக்கொள்ளுதற்குரிய அவ்விடங்களையுடைய அகற்சியையுடைய ஊர்களில் விழாக்கொள்ளுதலையுடைய களத்தே மிக்கு,

ஆங்கணென்றது - கோயில்களை.

அரிக் கூட்டு இன்னியம் கறங்க ஆடும் மகள்—அரித்தெழுகின்ற ஓசையைக்கூட்டுதலையுடைய இனிய வாச்சியங்களொலிப்ப ஆடுகின்றமகள்,

கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்—கழாய்க்கயிற்றிலே ஏறியாடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளருமாறுபோலத் தளருஞ்சாரல்,

தேறலயின்ற தோகை கூத்தாட ஆற்றாது தளருஞ் சாரலையுடைய குன்றென்க.

இதற்கு உள்ளுறையுவமங் கொள்ளுமாறு:—மிளகுக்கபாறை அந்நிலத்து மாக்களுறைகின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்ததேறல் தந்தையாலும் தாயாலுமுளனாகிய தலைவனாகவும், பிரசம் இவரைக்கூட்டின பால்வரைதெய்வமாகவும், அதனையுண்டமயில் உயர்ந்த தலைவனைத் தன்குலத்திற்கு ஒத்தானாகக்கருதி நுகர்ந்ததலைவியாகவும் அத்தேறலிற்பிறந்த களிப்புக் களவொழுக்கத்தாற்பிறந்த பேரின்பமாகவும் மயில் ஆடவாற்றாத்தன்மை வருந்திக்குறைந்த தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

[வரையர மகளிரிற் சாஅய் விழைதக, விண்பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தட், டண்கம ழலரி தாஅய்:] விண் பொருஞ் சென்னிக் கிளைஇய காந்தள் தண் கமழ் அலரி வரை அரமகளிரில் சாஅய் விழைதகத் தாஅய்—விண்ணைத்தீண்டுகின்ற சிகரங்களிலே கிளைத்த செங்காந்தளினுடைய குளிர்ந்த மணக்கின்ற பூக்கள் கீழே வரையரமகளிர் பார்த்து விளையாடுதலிற் நலம் சிறிதுகெட்டு விரும்புதல்தரும்படி கீழே வந்து பரந்து,

நன் பல வம்பு விரி களத்திற் கவின் பெறப் பொலிந்த குன்று கெழு நாடன்—நன்றாகிய பலவாகிய கச்சுப்பரந்த களம்போலே அழகுபெறப் பொலிவுபெற்ற மலை பொருந்தின நாடன்,

உயர்ந்தநிலத்தேநின்று மணக்கின்ற காந்தள் வரையரமகளிராற் கீழ்நிலத்தே பரந்து அவ்விடத்தைக் கச்சுவிரித்தாற்போல அழகுபெறுத்துமென்றதனால், நம்மினுயர்ச்சியையுடைய தலைவன் நமது நல்வினையாற் றனதுபெருமைகள் தானுமொழிந்து இவ்விடத்தே வந்துகூடி நமக்கும் உயர்ச்சியுளதாக்கி நம்மை அழகுபெறுத்துகின்றானென்று உள்ளுறையுவமமெய்திற்று.

எம் விழைதரு பெருவிறல்—எம்மை எப்பொழுதும் விரும்புதலைத்தருகின்ற பெரியவெற்றியையுடையவன்,

அவ்வழி (கஅக) உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு—தான்முயங்குகையினாலே அப்பொழுது இவளுள்ளத்து நிகழுந்தன்மை மேல்வரைந்துகொண்டு இல்லறநிகழ்த்துதலாயிருக்குமென்று நினைந்தனனாய் அதனையுட்கொண்டு,

அவ்வழி இங்கேகூட்டிற்று.

[சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி, வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண:]

பலர் உண மலரத் திறந்த வாயில் வளநகர்—பலரும்வந்து உண்ணும்படி | அகலக் கதவு திறந்துகிடக்கின்ற வாசலையுடைய வளநகர்,

மிடாச் சொன்றி வருநர்க்கு வரையாச் சாறு அயர்ந்து அன்ன வளநகர் பொற்ப—மிடாச்சோற்றை வருவார்க்கெல்லாம் வரையாமலிடுகின்ற விழாக்கொண்டாடினாற்போன்ற செல்வத்தையுடைய அகம் பொலிவுபெறும்படி,

முன்புள்ள இயல்புகூறிற்று.

பை நிணம் ஒழுகிய நெய் மலி யடிசில்—பசுத்த நிணமொழுகின நெய்மிக்க அடிசிலை நீயிடுகையினாலே,

வசை இல் வான் துணைப் புரையோர் கடும்பொடு விருந்துண்டு எஞ்சிய மிச்சில்—குற்றமில்லாத உயர்ந்தகுலத்திற்பிறந்த உயர்ந்தோர் தமதுசுற்றத்தோடே விருந்துண்டு மிக்க அடிசிலை,

பெருந்தகை—பெரிய தகைமைப்பாடுடையவன்,

நின்னொடு உண்டலும் புரைவது என்று ஆங்கு அறம் புணையாகத் தேற்றி—நீயிடுகையினாலே யானுண்டலும் உயர்ந்ததென்றுசொல்லி அப்பொழுது இல்லறம் தங்களைக்கரையேற்றுவதாகத் தெளிவித்து,

ஒடு ஆலாக்குக.

பிறங்கு மலை மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி—பெரியமலையில் மிகஉயர்ந்தவிடத்தே யுறைகின்ற முருகனையும்வாழ்த்தி வணங்கி அவன்முன்னே இவள் மயக்கமுறுதற்குக் காரணமான வஞ்சினத்தை உண்மையாற்றெளிவித்து,

வஞ்சினம் - பிரியின் அறனல்லதுசெய்தேனாவேனென்னுமொழி. முன்றேற்றுதலின், ஏமுறுவஞ்சினமென்றார்.

அம் தீந்தெண்ணீர் குடித்தலின் நெஞ்சு அமர்ந்து—அம்மலையில் அழகிய இனிய அருவிநீரை அவன்குடிக்கையினாலே இவள்நெஞ்சு சூளுறவிலே பொருந்தி,

நீர்குடித்தலும் ஒருசூளுறவென்று கொள்க. நெஞ்சமைந்தென்றும் பாடம்.

[அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி, வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும், பூமலி சோலை யப்பகல் கழிப்பி:] வான் உரி உறையுள் வயங்கியோர் அவாவும் அரு விடர் அமைந்த பூ மலி சோலை களிறு தரு புணர்ச்சி அப் பகல் கழிப்பி—ஆகாயத்திடத்தே தமக்குரிய இருப்பினையுடைய விளங்கிய தேவர்விரும்பும் அரிய முழைஞ்சுகளினிடத்தே பொருந்தின பூமிக்க சோலையிலே களிறுகூட்டின கூட்டத்தை அன்றைப்பகற்பொழுதெல்லாம் போக்கி,

உரிய உறையுள் - விகாரம்.

உண்மைசெப்புங்கிளவி கூறினுள்.

[எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப், பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய:] பல் கதிர் மண்டிலம் ஏழ் ஊர்பு எல்லை செல்ல இறைஞ்சிக் கல் சேர்பு மறைய—பலகிரணங்களையுடைய ஞாயிறு எழுகுதிரைபூண்ட தேரையேறிப் பகற்பொழுது போம்படி தாழ்ந்து அத்தகிரியைச்சேர்ந்து மறைகையினாலே,

மான் கணம் மரமுதல் தெவிட்ட—மான்றிரள் மரத்தடிகளிலே திரள,

அசையிடுதலுமாம்.

ஆன் கணம் கன்று பயிர் குரல மன்று நிறை புகுதர—பசுவினுடையதிரள் கன்றுகளையழைக்குங் குரலையுடையவாய் மன்றுகள்நிறையப் புகுதலைச்செய்ய,

ஏங்கு வயிர் இசைய கொடு வாய் அன்றில் ஓங்கு இரும் பெண்ணை அகமடல் அகவ—ஊதுகின்ற கொம்புபோன்ற ஓசையையுடைய வளைந்த வாயையுடைய அன்றில் உயரும் பெரியபனையில் உண்மடலிலேயிருந்து பேட்டையழைக்க,

பாம்பு மணி உமிழ—பாம்பு தான்மேய்தல் காரணமாகத் தன்னிடத்துமாணிக்கத்தை யீன,

*[பல்வயிற் கோவலர், ஆம்பலந் தீங்குழற் றெள்விளி பயிற்ற:] கோவலர் பல் வயின் ஆம்பல் அம் தீங் குழல் தெள் விளி பயிற்ற—இடையர் பலவிடங்களினுநின்று ஆம்பலென்னும் பண்ணினையுடைய அழகிய இனிய குழலிடத்துத் தெளிந்த ஓசையைப் பலகாலுமெழுப்ப,

ஆம்பல் ஆய் இதழ் கூம்பு விட—ஆம்பலினது அழகியஇதழ்கள் தளையவிழ,

[வளமனைப், பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி, யந்தி யந்தண ரயர:]

அந்தணர் அந்தி அயர—பார்ப்பார் அந்திக்காலத்துச் செய்யுந்தொழில்களை நிகழ்த்த,

வள மனைப் பூந்தொடி மகளிர் சுடர் தலைக்கொளுவி அந்தி அயர—செல்வத்தையுடைய மனைகளிற் பொலிவுபெற்ற தொடியினையுடைய மகளிர் விளக்கை அவ்விடத்தேகொளுத்தி அந்திக்காலத்திற் றொழிலைநிகழ்த்த,

கானவர் விண் தோய் பணைமிசை ஞெகிழி பொத்த—அக்காட்டில்வாழ்வார் விண்ணைத்தீண்டுகின்ற பரணின்மேலே தீக்கடைகோலாலே நெருப்பைப்பிறப்பித்து எரிப்ப,

வானம் மா மலை வாய் சூழ்பு கறுப்ப—மேகம் பெரிய மலையிடத்தைச்சூழ்ந்து கறுப்ப,

கானம் கல்லென்று இரட்ட—காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னுமோசையை யுடையவாய் ஒன்றற்கொன்று மாறிக்கூப்பிட,

கானம் - ஆகுபெயர்.

புள்ளினம் ஒலிப்ப — பறவைகள் குடம்பைக்கண்ணேநின்று ஆரவாரிக்கையி ஞலே,

* [சினைஇய வேந்தன் செல்சமம் கடுப்பத், துனைஇய மாலை துன்னுதல் காணூஉ:]

தெவிட்டப் (உகள) புகுதர (உகஅ) அகவ (உஉ0) உமிழப் (உஉக) பயிற்றக் (உஉஉ) கூம்புவிட (உஉ௩) அயரப் (உஉ௫) பொத்தக் (உஉ௬) கறுப்ப (உஉள) இரட்ட ஒலிப் பச் (உஉஅ) செல்சமங்கடுப்ப (உஉ௯) மாலை துன்னுதல்கண்டு (உ௩0) என முடிக்க.

இவ்வெச்சங்கள் எதிர்காலமுணர்த்தின. † "நிலனொருங்கு மயங்குத லின் றென மொழிப." எனவே காலமிரண்டு மயங்குமென்றலிற் குறிஞ்சியின் மாலைக்கா லங்கூறினர்.

[நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மண மயர்கஞ் சின்னாட், கலங்க லோம்புமி னிலங்கிழை யீரென, வீர நன்மொழி தீரக் கூறி:]

இலங்கிழையீர்—விளங்குகின்ற பூணினையுடையீர்,

நுமர் நேர் இறை முன்கை பற்றித் தர நாடு அறி நல் மணம் அயர்கம்—நும்மு டையசுற்றத்தார் நுமது நேரிய இறையினையுடைய முன்கையைப்பிடித்து எமக்குத் தர நாட்டிலுள்ளாரெல்லாமறியும் நன்றாகியகலியாணத்தினைப் பின்பு நிகழ்த்துவேம்;

சின்னாள் கலங்கல் ஓம்புமின் என ஈரம் நன்மொழி தீரக் கூறி—யாம் இக்கள வொழுக்கத்தாற்பெறும் பேரின்பம்பெறுதற்குச் சிறிதுநாள் இங்ஙனம் ஒழுகாநின் றேமென்று நெஞ்சுகலங்குதலைப் பாதுகாப்பீராகவென்று அருளுடைத்தாகிய நல்ல வார்த்தையை இவள்நெஞ்சில் வருத்தந் தீரும்படி சொல்லி,

துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து—ஆவைப்புணர்ந்த ஏறுபோலே விடா மல் எம்முடனேகூடவந்து,

துஞ்சா முழவின் மூதூர் வாயில் உண் துறை நிறுத்துப் பெயர்ந்தனன்—ஓசை யை ஒருகாலுமறாத முழவினையுடைய பழைய நம்மூர்வாசலில் பலரும் நீருண்ணுந் துறையிலே எம்மைநிறுத்தி மீண்டுபோனான்;

இதனால் வேட்கையுரைத்தல் கூறினாள்.

அதற்கொண்டு அன்றை அன்ன விருப்போடு என்றும் இர வரல் மாலையனே— அப்புணர்ச்சிதொடங்கி அம்முதனாள்போன்ற விருப்பத்தோடே எந்நாளும் இர வுக்குறியிலே வருதலைத் தனக்கியல்பாகவுடையன்;

ஏகாரம் - ஈற்றசை.

வருதோறும் காவலர் கடுகினும் கதன் நாய் குரைப்பினும் நீ துயிலெழினும் நிலவு வெளிப்படினும்—அங்ஙனம் வரும்போதெல்லாம் ஊர்காவலர் கடுகிக்காத்தாராயினும் கோபத்தையுடைய நாய் குரைத்ததாயினும் நீ துயிலுணர்ந்தாயாயினும் நிலவு வெளி யாகவெறித்ததாயினும்,

வேய் புரை மென் தோள் இன்துயில் பெறாஅன்—மூங்கிலையொத்தமெல்லிய தோளிற்பெறும் இனியதுயிலைப் பெறாதுபோவன்;

பெயரினும் முனியல் உறாஅன்—யாங்கள் குறியல்லதனைக் குறியாகக்கருதிச் செல்லாநின்றுமீண்டு மனையிடத்தேபுகுதினும் அதற்கு வெறுத்தலைச்செய்யான்;

* இதற்கு உரைகிடைத்திலது.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கஉ.

இளமையின் இகந்தன்றும் இலனே—அவன்றான் இளமைப்பருவத்தைக் கடந்ததுமிலன்;

[வளமையிற், றன்னிலை திரிந்தன்று மிலனே:] வளமையில் என்றும்(உசஉ) தன்னிலை திரிந்தன்றும் இலனே— நற்குணங்களைத் திரித்தற்குரிய செல்வச்செருக்கான் எந்நாளும் தன்குலத்திற்குரிய நற்குணங்களின் நீங்கியதுமிலன்;

ஏகாரங்கள் - ஈற்றசை.

கொன் ஊர் மாய வரவின் இயல்பு நினைஇத் தேற்றி—அலர்முதலியவற்றான் அச்சத்தையுடைய இவ்வூரின்கண்ணே தனக்குப் பொய்யாயிருக்கின்ற இரவுக்குறியிலே கூடுதற்குவருகின்ற வரவினது தன்மையை இஃதொழுக்கமன்றென்று நினைத்து அவன் வரைந்துகொள்ள இல்லற நிகழ்த்துதலே நல்லொழுக்கமென்று துணிகையினாலே,

[நீரொறி மலரிற் சாஅ யிதழ்சோரா, வீரிய கலுழுமிவள் பெருமதர் மழைக்கண்:] இவள் பெரு மதர் மழைக் கண் நீர் எறி மலரிற் சாஅய் இதழ் சோரா ஈரிய கலுழும்—இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள் பெருந்துளியெறிந்துபெய்தமலர்போலே அழகுகெட்டு இமைசோர்ந்து ஈரத்தினையுடையவாய்க் கலங்காநிற்கும்;

[ஆகத் தரிப்பனி யுறைப்ப நாளும், வலைப்படு மஞ்ஞையி னலஞ்செலச் சாஅய், நினைத்தொறுங் கலுழுமா லிவளே கங்குல், லளைச்செறி யுழுவையு மாளியு முளியமும், புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும், வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத், துருமுஞ் சூரு மிரைதே ரரவமு, மொடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங், கொடுந்தாண் முதலையு மிடங்கருங் கராமு, நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும், பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும், வழுவின் வழாஅ விழுமமவர், குழுமலை விடரக முடையவா லெனவே:]

இவள் அவர் குழுமலை விழுமம் உடையவால் என நினைத்தொறும் வலைப் படு மஞ்ஞையின் நலம் செலச் சாஅய் அரிப் பனி நாளும் ஆகத்து உறைப்பக் கலுழும்—இவள் அங்ஙனந்தேற்றிக் கண்ணழுகின்றதற்கு மேலே அவர்வருகின்ற மலை இடும்பையுடையவாயிருக்குமென்று நினைக்குந்தோறும் வலையிலகப்பட்ட மயில்போலே தன்னலம்போம்படி நுணுகிக் கண்ணில் அரித்துவீழ்கின்றநீர் நாள்தோறும் மார்பிலேதுளிப்பக் கலங்காநிற்கும்;

கங்குல்—இராக்காலத்து,

அளைச் செறி உழுவையும்—முழைஞ்சிடத்திலே செறியும் புலிகளும்,

யாளியும்—யாளிகளும்,

உளியமும்—கரடியும்,

புழல் கோடு ஆமான் புகல்வியும்— உள்ளுப்பொய்யான கொம்பையுடைய ஆமானேறும்,

களிறும்—யானையும்,

வலியின் தப்பும் வன்கண் வெஞ்சினத்து உருமும்— வலியினாற்கெடுக்கும் தறுகண்மையையுடைத்தாகிய வெவ்விய சினத்தையுடைய உருமேறும்;

சூரும்— கொடுந்தெய்வமும்,

இரை தேர் அரவமும்—இரைதேடித்திரியும் பாம்பும்,

ஒடுங்கு இருங்குட்டத்து அருஞ்சுழி வழங்கும் கொடுந்தாள் முதலையும் இடங்கரும் கராமும்—புடைபட்ட கரிய ஆழத்திடத்துப் போதற்கரிய சுழியிடத்தேதிரியும் வளைந்ததாளையுடைய முதலையும் இடங்கரும் கராமும்,

இவை மூன்றும் சாதி விசேடம்.

நூழிலும்—வழிபறிப்பார் கொன்றுகுவிக்குமிடங்களும்,

நூழில் - கொடிப்பிணக்கென்பாருமுளர்.

இழுக்கும்—வழுக்குநிலமும்,

ஊழ் அடி முட்டமும்—முறையடிப்பாடாய்ப் பின்பு வழிமுட்டாயிருக்கும் இடங்களும்,

பழுவும்—பிசாசும்,

பாந்தளும்—பெரும்பாம்பும்,

உளப்படப் பிறவும் வழுவின் வழாஅ விழுமம்—உழுவைமுதலாக எண்ணப்பட்ட இவையெல்லாமுட்பட வேறும் தப்புஞ்செயலிற் றப்பாத இடும்பைகளை,

விழுமஞ்செய்வனவற்றை விழுமமென்றார்; இஃது ஆகுபெயர்.

அவர் குழு மலை விடரகம் உடையவால் என—தலைவருடைய இளையையுடைத்தாகிய மலையின்முழைஞ்சிடம் உடையவாயிருக்குமென்று.

அன்னாய் வாழி; அன்னாய் யான்கூறுகின்றதனை விரும்புவாயாக (௧); நீயும் எய்யாமையலையாகி வருந்துதி (௮); இவளும் (௨௬) ஏனையுலகத்தும் இயைவதாலெனக் கூறி(௨௪) மெலியும் (௨௬); யானும் (௨௯) சான்றோர்போல (௨௮) வருந்தாநின்றேன் (௨௯); எண்ணாது (௩௧) எமியேந்துணிந்த அருவினை (௩௨) நிகழ்ந்தவண்ணம் நீயுணரச் (௩௩) செப்புதலையமைந்தேன்; அதுகேட்டுச் சினவாதிமோ (௩௪); தினையிற் படுபுள்ளோப்பி (௩௮) வருதியரென நீ போகவிடுகையினாலே (௩௯) யாங்களும்போய் இதணமேறிக் (௪௧) கிளிகடிமரபினவற்றை வாங்கி ஓட்டிக் (௪௪) கொண்மூப் (௫௦) பொழிந்தென (௫௩) நெடுங்கோட்டிழிதரும் தெண்ணீர் (௫௪) அருவி (௫௫) யாடிப் (௫௬) பாய்சுனைகுடைவுழிப் (௫௭) பாயம்பாடிக் (௫௮) கூந்தலைப்பிழிவணந்துவாரிச் (௬௦) சிவந்தகண்ணேமாய் (௬௧) மலிவனமறுகிப் (௯௭) பரேரம் புழகுடனே (௯௬) காந்தள் (௬௨) முதலியவற்றையும் பிறவற்றையும் (௯௫) பாறையிலேகுவித்துத் (௯௮) தெள்விளி பயிற்றி(௧௦௦) ஒப்பியும்(௧௦௧) தழைதைஇ உடுத்துக்(௧௦௨) கோதையை (௧௦௩) முச்சியிலேகட்டிச் (௧௦௪) செயலைத் (௧௦௫) தண்ணிழலிலே யிருந்தனமாக (௧௦௬), குன்றுகெழுநாடனாகிய எம்பெருவிறல் (௧௧௬) அணிபெறவந்து (௧௩௬) இளையீர், இறந்த (௧௪௧) கெடுதியுமுடையேனென்றனன்; அதனெதிர் (௧௪௨) சொல்லேமாதலிற் கலங்கி (௧௪௩) மெல்லியலீர், சொல்லும்பழியோவெனச்சொல்லி (௧௪௫) ஓச்சி (௧௫௦) அவித்துச் (௧௫௧) சொல்லற்பாணிநின்றனனாக (௧௫௨), வேழம் எதிர்தருகையினாலே (௧௬௫) விரைந்தவற்பொருந்தி (௧௬௮) நடுங்காநிற்கப் (௧௬௯) பகழியைவாங்கி (௧௭௦) அணிமுகத் தழுத்தலின் (௧௭௧), அதுபுறங்கொடுத்தபின் (௧௭௪) கலுழிபாய்தலின் (௧௭௮) வாழையினடுங்கினமாக, அதுகண்டு பெருந்தகை (௧௭௯) எடுத்து அஞ்சலோம்பெனச்சொல்லி (௧௮௧) நீவி நினைந்து (௧௮௨) என் முகநோக்கி நக்கனன் (௧௮௩); அவ்வழி நாணுமுட்கும் அடைதருகையினாலே (௧௮௪) இவள்நீங்கவும் விடாணாய் (௧௮௫) அந்நிலை (௧௮௩) முயங்கலின், அவ்வழி (௧௮௬) யிவளுள்ளத்தன்மை யுள்ளினனாய் அதனையுட்கொண்டு (௨௦௦) விருந்துண்டெஞ்சிய மிச்சிலை (௨௦௬) நீயிடுகையினா

லே யானுண்டலும் புரைவதென்று சொல்லித் (உ0எ) தேற்றிப் (உ0அ) பெருந்தகை (உ0கூ) கடவுளும் வாழ்த்திக் கைதொழுது (உ0க) வஞ்சினம்வாய்மையிற் றேற்றித் (உக0) தெண்ணீர்குடித்தலின் நெஞ்சமர்ந்து (உகக) சோலையிலே (உகச) களிறுதருபுணர்ச்சியைக் (உகஉ) கழிப்பி (உகச) மண்டிலம் மறைகையினுலே (உககூ) மாலைநன்னுதல் கண்டு (உரு0) இலங்கிழையீர், கலங்கலோம்புமினென (உருரு) ஈர நன்மொழிகூறி (உருச) எம்மொடுவந்து (உருடு) உண்துறைநிறுத்துப் பெயர்ந்தனன்; அதற்கொண்டு (உருஎ) என்றும் (உருஅ) இரவில்வருமாலையன்; வருந்தோறும் (உருகூ) கடுகினும் குறைப்பினும் (உசூ0) துயிலெழினும் வெளிப்படினும் (உசூக) இன்றுயில்(உசூஉ)பெருமற் போவன்; அதுவேயன்றிப் பெயரினும் முனியலுறான்(உசூரு); இகந்தன்றுமிலன் (உசூச); என்றும் (உசூஉ) தீர்ந்தன்றுமிலாதவன் (உசூடு) மாயவரவினியல்புநினைந்து தேற்றுகையினுலே(உசூகூ) இவள்கலுழும் (உசூஅ); அங்ஙனம் அழுகின்றதற்குமேலே அவர்வருகின்ற (உசூ0) குழுமலைவிடரகம் (உசூக) விழுமம் (உசூ0) உடையவென (உசூக)நினையுந்தோறும் (உடுக) சாஅய் (உடு0) உறைப்பக் (உசூக) கலங்காநிற்கும் (உடுக); இதுகாண் நல்வினை நிகழ்ந்தவண்ணமென்றுளென வினைமுடிக்க.

ஆரியவரசன்பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர்பாடிய குறிஞ்சிப்பாட்டிற்கு மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

க நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடைய
ளென்குற்றம் யானு முணர்கலேன் - பொன்குற்
றருவி கொழிக்கு மணிமலை நாடன்
றெரியுங்காற் றீய திலன்.

உ ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே - தேற்ற
மறையோர் மணமெட்டி னைந்தா மணத்திற்
குறையக் குறிஞ்சிக் குணம்.